**<u>அரக்கோணம் நகராட்சி</u>**
**<u>சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு</u>**

கூட்ட எண்.59 நாள்..26.06.2020.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்.30.06.2020 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 30.06.2020 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் மே/2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சியில் பொதுபிரிவில் தட்டச்சர் பணியிடம் பணி செய்துகொண்டிருந்த திருமதி. என். வைலட்ராணி என்பவர் வயது முதிர்வு காரணமாக 30.11.2016ல் ஒய்வு பெற்றார். இப்பணியாளர் ஒய்வுபெற்ற நாளிலிருந்து இப்பணியிடம் நிரப்படாமல் உள்ளது. இப்பணியிடம் அனுமதிக்கப்பட்ட நிரந்தர பணியிடமாகும். இப்பணியிடத்தை அடிப்படை பணியாளர்களான துப்புரவு பணியாளர்கள், கொசுஒழிப்பு பணியாளர்கள், பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர்கள் மற்றும் பதிவறை எழுத்தர் பணியிடங்களில் பணிபுரியும் கல்வி தகுதிவாய்ந்த (துட்டச்சர் தமிழில் இளங்களையும், ஆங்கிலத்தில் முதநிலை தேர்ச்சி பெற்றவர்களை) கல்விதகுதியின்அடிப்படையில் அரசாணை எண். 216 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.08.1992ன்படி அடிப்படை பணியாளர்களை பதவி உயர்வில் நிரப்பலாம் என உள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் உள்ள அடிப்படை பணியாளர்களில் முன்னுரிமை அடிப்படையிலும், பணிமூப்பு அடிப்படையிலும் பதவி உயர்வில் இப்பணியிடத்தினை நிரப்பிக்கொள்ள உரிய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் பெறவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** **தட்டச்சர் பணியிடம் இன்றியமையாததாக உள்ளதால் மேலும் இப்பணியிடம் நீண்டகாலமாக (3 1/2 வருடங்களாக) காலிபணியிடமாக உள்ளதாலும் நகராட்சி நிர்வாகத்தின் நலன் கருதியும் இப்பணியிடத்தை அடிப்படை பணியாளர்களை பதவி உயர்வில் நிரப்பிக்கொள்ள உரிய அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க. எண். 000432/எச்1/2020)**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் பொதுசுகாதார ஒட்டுநர் பணியிடம் ஒரு பணியிடம் மற்றும் பொறியியல் பிரிவில் ஒட்டுநர் பணியிடம் இரண்டு பணியிடமும் காலியாக உள்ளது அதன் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | பிரிவுகள் | பணியாளர் பெயர் | ஊதிய விகிதம் | காலிபணியிடமாக உள்ளமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| 1 | பொறியியல் பிரிவு | 1) திரு.ஜி.சேகர், ஒட்டுநர் | **Rs. 19500-62000 (Level 8)** | வயது முதிர்வு காரணமாக 31.05.2014ல் ஒய்வுபெற்றார் |
| 2 | பொறியியல் பிரிவு | 2) திரு.எஸ்.அமலன்காந்தி ஒட்டுநர் | **Rs. 19500-62000 (Level 8)** | உடல்நிலை சரியின்மையால் 05.10.2019ல் காலமானார் |
| 3 | பொதுசுகாதார பிரிவு | 3) திரு.ஆர். கஜேந்திரன், ஒட்டுநர் | **Rs. 19500-62000 (Level 8)** | வயது முதிர்வு காரணமாக 31.03.2018ல் ஒய்வுபெற்றார் |

மேற்காணும் பிரிவுகளில் உள்ள பணியிடங்கள் யாவும் கனரக வாகன உரிமம் பெற்ற ஒட்டுநர் பணியிடங்களாகும். இப்பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட நிரந்தர பணியிடங்களாகும். இப்பணியிடங்கள் பொதுசுகாதார பிரிவில் பணிசெய்த ஒட்டுநர் ஒய்வுபெற்று இரண்டு வருடங்கள்ஆன நிலையில் உள்ளது. பொறியியல் பிரிவில் பணி செய்த ஒட்டுநர் ஒய்வுபெற்று 6 வருடங்கள் ஆகியும், இரண்டாம் நபர் ஒட்டுநர் உடல்நிலை சரியின்மையால் காலமாகி 7 மாதங்கள்

ஆன நிலையிலும் உள்ளது. இப்பணியிடங்களை தற்போது பொதுசுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் காலியாக உள்ள அனுமதிக்கப்பட்ட நிரந்தர பணியிடமான ஒட்டுநர் பணியிடங்களை பொதுபிரிவு மற்றும் பொதுசுகாதார பிரிவுகளில் உள்ள அடிப்படை பணியாளர்களை கல்விதகுதி வாய்ந்த கனரக வாகன உரிமம் பெற்ற 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அடிப்படை பணியாளர்களை பொது சுகாதார வாகன ஒட்டுநராக பதவி உயர்வு வழங்கவும், கனரக வாகன உரிமம் பெற்று 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற வாகன உரிமம் பெற்ற பொதுசுகாதாரம் மற்றும் பொறியியல் பிரிவு, பொதுபிரிவுகளில் உள்ள அடிப்படை பணியாளர்களை பொறியியல் பிரிவிற்கு பதவி உயர்வு வழங்கி கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> **ஒட்டுநர் பணியிடங்கள் காலியாக உள்ளால் நகராட்சியில் உள்ள பொதுசுகாதார பணிகள் மற்றும் பொறியியல் பிரிவு பணிகள் மிகவும் பாதிக்கப்படுவதனாலும், மேலும் ஒட்டுநர் இல்லாமையால் வாகனங்கள் ஒட்டமின்றி பழுதடையும் நிலையில் உள்ளதாலும் நகராட்சியில் பொதுமக்கள் சேவையை அவசரம் அவசியம் கருதி, மேற்படி மூன்று ஒட்டுநர் பணியிடங்கள் காலியாகி ஆறு மாதங்கள் கடந்த நிலையில் இப்பணியிடங்களை தற்போது அனுமதி பெறவும், மேலும் அடிப்படை பணியாளர்களை பணிமூப்பு பட்டியலின்படி பூர்த்தி செய்து கொள்ளவும் உரிய அனுமதி பெற பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க. எண். 1833/எச்1/2019 நாள் 11.05.2020)**
**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் பொதுசுகாதார பிரிவில் துப்புரவுபணி மேற்ப்பார்வையாளர் பணியிடம் கீழ்காணும் விவரப்படி காலிபணியிடமாக உள்ளது.

| வ. எண் | பணியாளர் பெயர் | காலியாக உள்ளமைக்கான விபரம் |
|---|---|---|
| 1 | 1) திரு. A. சம்சுதீன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் | இப்பணியாளர் உடல்நலம் சரியின்மையால் 25.09.2018 அன்று காலமானார் |

காலியாகவுள்ள அனுமதிக்கப்பட்ட நிரந்தர பணியிடமான துப்புரவு பணி மேற்ப்பார்வையாளர் பணியிடத்தினை பொது சுகாதார பிரிவு துாய்மை பணியாளர்களை கொண்டு பணிமூப்பு அடிப்படையிலும், முன்னுரிமை அடிப்படையில் பதவி உயர்வில் இப்பணியிடத்தினை பொதுசுகாதார நிர்வாக நலன் கருதி நிரப்பிகொள்ளவும், இப்பணியிடம் ஆறு மாதம் கடந்த நிலையில் உள்ளதாலும் இப்பணியிட அங்கீகாரம் வேண்டியும், பதவி உயர்வில் இப்பணிடத்தினை நிரப்பிக்கொள்ள அனுமதி வேண்டியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு வழி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர், வேலுார் அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பிடவும் மன்றத்தின் பார்வைக்கு அங்கீகாரதிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> **பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணிமேற்ப்பார்வையாளர் பணியிடம் காலியாக உள்ளதால் பொதுசுகாதார பணி பொதுமக்களின் முக்கிய தேவையான இன்றியமையாத பணிகள் என்பதாலும் பொது சுகாதார பிரிவு துாய்மை பணியாளர்கள் பணிமூப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்து கொள்ள உரிய அனுமதி பெற பிரேரணை நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம். பதவி உயர்வில் நிரப்பிக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க. எண். 000414/2020/எச்2 )**
**பொருள் எண் :05**

குத்தகை, அரக்கோணம் நகராட்சி 2020 –2021க்கு புதிய பேருந்து நிலையத்தில் வரும் பேருந்துகளுக்கு சுங்கம் வசூல் செய்யும் உாமம் 31.03.2020 உடன் முடிவடைவதால் 2020–2021

ஆண்டுகளின் அனுபோக உரிமைக்கு 5% உயர்வு செய்து அறிவிப்பு கடிதம் ந.க.எண். 18/அ1/2018 நாள் 02.03.2020 மற்றும் 16.03.2020ன்படி அனுப்பப்பட்டது. இது நாள்வரை தொகை செலுத்தவில்லை குத்தகை நிபந்தனையினை மீறியுள்ளார். எனவே, சுங்கம் வசூல் செய்யும் உரிமம் திரு. பொன் நடராஜன், குத்தகைதாரர் அவர்களுக்கு குத்தகையினை ரத்து செய்யவும், மேலும் தற்போது COVID 19 கொரோனா நோய் தொற்று பரவி வருவதால் ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரும் வரை துறை வசூல் மூலம் 01.07.2020 முதல் வசூல் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க. எண். 18/அ1/2018 )**

**பொருள் எண் :06**

இந்நகராட்சியில் 2019–2020ன் கீழ் 19.06.2020ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | அரக்கோணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள UPS பேட்டரிகளை புதியதாக பொருத்தி இயக்கி தருதல். | **5.00** | ஜி.ரவி | 0.06% | எஸ்.ரமேஷ்பாபு | 1.52% |
| 2 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பூங்கா சாலைகளில் உள்ள மேடு பள்ளங்களை JCB இயந்திரம் கொண்டு சுத்தம் செய்தல். | **5.00** | எஸ்.பாஸ்கரன் | 0.08% | ஜி.தமோதரன் | 0.42% |
| 3 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட காந்தி பூங்கா மற்றும் பழனிபேட்டை பூங்காவிற்கு மேற்கூறை அமைத்தல். | **2.50** | ஜி.ரவி | 0.02% | எஸ்.ரமேஷ்பாபு | 1.17% |
| 4 | அரக்கோணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கழிப்பறை பராமரிப்பு பணி செஃ ய்தல் மற்றும் நில அளவையர் அறைக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல். | **9.90** | ஜி.ரவி | 0.02% | எஸ்.ரமேஷ்பாபு | 0.58% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 4 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**பொருள் எண் :07**

இந்நகராட்சியில் 2019–2020ன் கீழ் 19.06.2020ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீ டு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகித ம் | பெயர் | அதிக சத விகித ம் |
| **1.** | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார் கணேஷ் நகர் 2, 3, 4–வது தெருவில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட சாலைகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் | **9.80** | என்.பாபு | 0.03% | எஸ்.ரமேஷ்பாபு | 0.67 % |
| **2.** | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3 கணேஷ் நகர் மற்றும் சாஸ்திரி நகர் குறுக்கு தெருவிற்கு மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | **2.50** | எஸ்.ரமேஷ்பாபு | 0.78% | என்.பாபு | 1.35 % |
| **3.** | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 25வது வார்டு, வின்டர்பேட்டை, ப.உ.சண்முகம் சாலையில் மழைநீர் கல்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | **4.00** | ஜி.ரவி | 0.52% | எஸ்.ரமேஷ்பாபு | 1.82 % |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மலிவு விலை அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகை பொருட்கள், அரிசி ,காய்கறி மற்றும் தயிர், எரிவாயு உருளை வாங்கவும், மற்றும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளீர் சுய உதவி குழு பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சி தலைவரின் வழிகாட்டுதலின்படி நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் வழங்குதல் உட்பட ஒரு மாதத்திற்கு தோரயமாக **ரூ.5,00000/–** வீதம், **12** மாதங்களுக்கு **12 x 5,00,000/–** ரூ.**60,00000/–** ( ஆறுபது இலட்சங்கள்) நகராட்சியின் அம்மா உணவக வங்கி கணக்கிலிருந்து **2020–2021** நிதி ஆண்டிற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் அரசு நிதி வரும் பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் வி. கேசவன் என்ற பெயரில் வழங்க வேண்டிய வைப்பு தொகைகள் நிலுவையில் இருப்பதாக வி. கேசவன் என்பவரின் வாரிசும் மகனுமான கே. முனுசாமி என்பவர் தம் தகப்பனார் 18.05.2012ல் இறந்து விட்டதாகவும் தம் தகப்பனார்

இறந்தமைக்கான இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று வழங்கியும் வாரிசு சான்றில் உள்ள பிற வாரிசுகள் தம் சகோதரர் கே. முனுசாமி என்பவருக்கு வழங்கவேண்டிய நிலுவையில் உள்ள வைப்பு தொகைகள்யாவும் வழங்கலாம் எனவும் ஆட்சேபனை இல்லா சான்றில் தெரிவித்துள்ளனர். ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய வைப்பு தொகைகள் யாவும் நடப்பாண்டில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக உள்ள வைப்புதொகைகள் யாவும் காலங்கடந்த வைப்பு தொகையாக எடுத்து கொள்ள வேண்டும் என உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, காலஞ்சென்ற ஒப்பந்ததாரர் வாரிசும் மகனுமான கே. முனுசாமி என்பவர் கோரியுள்ள வைப்புத் தொகைகள் கீழ்காணும் விவபரப்படி மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | வருடம் | தொகை |
|---|---|---|
| 1 | 2008–09 | 15180 |
| 2 | 2009–10 | 35500 |
| 3 | 2010–11 | 10500 |
| 4 | 2011–12 | 3000 |
| 5 | 2013–14 | 57753 |

மேற்காணும் விவரப்படி வழங்கப்படாம்ல் உள்ள நிலுவை தொகை ரூ. 60753/–யை காலங்கடந்தவையாக நிலுவையாக உள்ளதை ஒப்பந்ததாரர் வாரிசும் மகனுமான கே. முனுசாமி என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **ஒப்பந்ததாரர் வி. கேசவன் என்பவர் இறந்துவிட்டபடியால் அவரின் வாரிசும் மகனுமான கே முனுசாமி என்பவருக்கு வாரிசு சான்றில் உள்ள பிற வாரிசுகள் கொடுத்த ஆட்சேபனை இல்லா சான்றிதழ்படியும் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள வைப்பு தொகையினை ஒப்பந்ததாரரின் வாரிசும் மகனுமான கே. முனுசாமி என்பவருக்கு இத்தொகை வழங்கலாம்.**

**(ந.க. எண். 000394/2020/பி3)**

**பொருள் எண்.10**

அரக்கோணம் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் சி. கமலா என்பவர் முடிக்கப்பட்ட பணிகளுக்கு செலுத்திய வைப்புதொகைகள் கோரி விண்ணப்பித்துள்ளார். ஒப்பந்தாரருக்கு வைப்புதொகைகள் மீள வழங்கிட பொறியியல் பிரிவில் குறிப்பு கோரப்பட்டதில் வைப்புதொகைகள் வழங்கலாம் என பொறியாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார். தணிக்கை தடை பிரிவில் நிதி இழப்பீடான பத்திகள் கோரப்பட்டதில் 2011–12 முதல் 2015–16 வரை தணிக்கை தடை பத்திகள் ஏதமில்லை என சான்றளிதுள்ளனர். உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் நடப்பு ஆண்டில் இருந்து மூன்று வருடங்களுக்கு முன்னதாக உள்ள வைப்புதொகைகள் காலங்கடந்த வைப்பு தொகையாக எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர். ஒப்பந்ததாரர் கோரும் வைப்பு தொகைகள் 2011–12 முதல் 2015–2016வரை மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | வருடம் | தொகை |
|---|---|---|
| 1 | 2012–13 | 16700 |
| 2 | 2013–14 | 63886 |
| 3 | 2014–15 | 9300 |

மேற்காணும் விவரப்படி வழங்கப்படாம்ல் உள்ள நிலுவை தொகை ரூ. 89886/–யை காலங்கடந்தவையாக நிலுவையாக உள்ளதை ஒப்பந்ததாரர் சி. கமலா என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **ஒப்பந்ததாரர் கோரியுள்ள வைப்பு தொகை காலங்கடந்த வைப்புதொகை வழங்கப்படாமல் உள்ளதால் ஒப்பந்ததாரர் விண்ணப்பத்தின்படி மீள வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க. எண். 000392/2020/பி3)**

**பொருள் எண் :11**

இந்நகராட்சியில் பொதுநிதி பணிகள், திட்டபணிகள் செய்திடும் பதிவுபெற்ற ஒப்பந்தாரர்கள் பணிகளுக்காக செலுத்திய வைப்புதொகைகள் மற்றும் பட்டியல் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகைகளை, நடப்பாண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முன் உள்ள வைப்பு தொகைகள் யாவிம் காலங்கடந்த வைப்பு தொகைகளாக கொண்டு செல்ல வேண்டும் என உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சியில் வழங்கப்படாமல் நிலுவையாக உள்ள 2019–2020 ஆண்டுக்கு முன்னதாக மூன்று ஆண்டு முன்னதாக உள்ள 2008–2009ம் ஆண்டிலிருந்து 2015–2016ம் ஆண்டு வரை உள்ள வைப்பு தொகைகள் நிலுவையாக கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வருடம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 2008–09 | 255817 |
| 2 | 2009–10 | 169452 |
| 3 | 2010–11 | 240508 |
| 4 | 2011–12 | 1830866 |
| 5 | 2012–13 | 800460 |
| 6 | 2013–14 | 1483001 |
| 7 | 2014–15 | 1232204 |
| 8 | 2015–16 | 1305786 |
| | **மொத்தம்** | **7318094** |

மேற்காணும் விவரப்படி 2008–2009 முதல் 2015–2016 வரை உள்ளபட்டியலிடப்பட்ட தொகை ரூ. 7318094/– யை(ரூபாய் எழுபத்துமூன்று இலட்சத்து பதினெட்டாயிரத்து தொன்னுற்றி நான்கு மட்டும்) காலங்கடந்த நிலுவையாக எடுத்து கொள்ளவும், மேலும் 2011–12 முதல் 2015–16 வரை உள்ள தொகைக்கு மட்டும் உள்ள நிலுவை வைப்பு தொகையினை ஒப்பந்ததாரர்களிடம் இருந்து அவ்வபோது வரப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் பெயரில் உள்ள வைப்பு தொகைகளை வழங்கிடவும் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **2011–2012 முதல் 2015–2016 வரை உள்ள காலத்திற்கு ஒப்பந்ததாரர்கள் பணி முடித்து பட்டியல் முழுவதும் பெற்றுள்ள ஒப்பந்ததாரர்பகள் பட்டியல் தணிக்கை பிரிவில் நிதி இழப்பீடான பத்திகள் இல்லையெனில் நிலுவையாக உள்ள வைப்புதொகையினை விண்ணப்பம் செலுத்தி கோரும் ஒப்பந்ததாரர்களுக்கு வமுங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க. எண். 000471/2020/பி3)**

**பொருள் எண் :12**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை பரவாமல் கட்டுப்படுத்தவும் முதிர் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கைபுகை மருந்து அடிக்கும் இயந்திரம் 2 லிட்டர் கொள்ளவு கொண்டது (5 எண்ணிக்கை) மற்றும் ஊலடனேநச 1 லிட்டர் கொள்ளவு கொண்ட இயந்திரம் (2000 எண்ணிக்கை) கொள்முதல் செய்து கொள்ள மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **மருந்து அடிக்கும் இயந்திரம் விவரம்** | **எண்.ஆர். டிரேடர்ஸ், கோயமுத்தூர் – 25 ஒன்றின் விலை ரூ. (GST உட்பட )** | **அமுதா ஏஜென்சீஸ், கோயமுத்தூர் – 641406 ஒன்றின் விலை ரூ. (முளுகூ உட்பட)** |
|---|---|---|---|
| 1 | 2 Litre capacity hand fogging machine | **28000/–** | **29120/–** |

| | | | |
|---|---|---|---|
| 2 | 1 Litre capacity cylinder | 325/– | 347/– |

மேற்காணும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **எண்.ஆர். டிரேடர்ஸ், கோயமுத்தூர்–25** அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தொகையை வழங்குவதற்க்கு பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு அவசரம் அவசியம் கருதி மன்ற முன்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.245/எச்1/2019)**

**பொருள் எண் :13**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துதல், தினசரி வீடுகள் மற்றும் தெருக்களிலுள்ள மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து on site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், 36 வார்டுகிளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை மற்றும் கால்வாய்களை சுத்தம் செய்தல், தூர்வாருதல், தெருக்களை பெருக்குதல் போன்ற பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் உள்ள 114 துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக அப்புறப்படுத்த முடியாத காராணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் 195 பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.30813/J3/2018 நாள். 11.12.2018ல் உத்திரவு வழங்கப்பட்டு ஆணையாளர், அரக்கோணம் நகராட்சி அவர்களின் பணி உத்திரவு ந.க.எண். 2835/எச்1/2018 நாள். 27.06.2019 ல் M/S கிரீன் வாரியர், திருவள்ளூர் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 01.07.2019ம் தேதி முதல் இது நாள் வரையிலும் 195 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் 30.06.2020 தேதியுடன் M/S கிரீன் வாரியர், திருவள்ளூர் நிறுவனத்திற்கு பணி உத்திரவு முடிவடைவதாலும் தற்போது கொரானா தொற்று உலகம் முழுவதும் பாதிப்பு ஏற்படுவதாலும் தமிழ்நாட்டில் 144 தடை உத்திரவு 30.06.2020 தேதி வரை உள்ளதாலும் இப்பொருள் குறித்து ஏற்கனவே முன்னதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலையில் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஏற்கனவே பணிசெய்து வரும் M/S கிரீன் வாரியர், திருவள்ளூர் நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தினரின் 15.06.2020 ஆம் தேதிய சம்மத கடிதத்தின் பேரில் தொடர்ந்து 3 மாதங்கள் பணி உத்திரவு வழங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 75.00 லட்சத்திற்கும், மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மற்றும் இப்பணு குறித்து மாநில நாளிதழ் மற்றும் அரசிதழில் பிரசுரம் செய்யும், அதற்கான தோராய செலவினம் ரூ. 1 . 50 லட்சத்திற்கும், மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**

**(ந.க. எண். 826/2015/எச்1)**

**பொருள் எண் :14**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06 டவுன் ஹால் 6–வது தெருவில் சாலை வசதி இல்லததால் பொது மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே இப்பகுதியில் புதியதாக பேவர் பிளாக் சாலை வசதியினை ஏற்படுத்த மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க. எண். 887/2018/இ1)**

**பொருள் எண் :15**

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவில் முதல் நிலை குப்பை சேகரிக்க பயன்படுத்தப்படும் தள்ளு வண்டிகள் (Push-cart) 30 எண்ணிக்கை பழுதடைந்துள்ளது அதனை பழுது நீக்கம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**<u>(ந.க.எண் 566/எச்1/2020)</u>**

**பொருள் எண் :16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கூட்டு துப்புரவு பணியினை மேற்கொள்ளவும் தூய்மையாக வைத்திடவும், தொற்று நோய் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், கிருமி நீக்கம் செய்யும் பணிக்கு தேவைப்படும் கீழ்காணும் கிருமிநாசினிகள் 2020–2021 ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **கிருமிநாசினி விவரம்** |
|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்பு தூள் |
| 2. | பிளிச்சிங் பவுடர், |
| 3. | பெனாயில் |

மேற்காணும் கிருமிநாசினிகள் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.16.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 600/எச்1/2020)**

**பொருள் எண் 17**

அரசாணை எண். 306 (நிதித்துறை) நாள்.13.10.2019.ல் மகப்பேறு உதவியாளருக்கு சீருடை வழங்கிட ஆண்டிற்கு ரூ.2000/– வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் மகப்பேறு உதவியாளராக பணிபுரியும் 1.திருமதி.ரோஸ் மற்றும் 2.திருமதி.ஜெயந்தி, என்பவர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கு ஒரு சீருடைக்காக ரூ.2000/– வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**<u>(ந.க.எண் 599/எச்1/2020</u>**

**பொருள் எண் :18**

இந்நகராட்சி பொதுபிரிவு, பொறியியல் பிரிவு, மற்றும் பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கு சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து கொள்ளவும் மற்றும் தையற்கூலி வழங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> இந்நகராட்சி பொதுபிரிவு, பொறியியல் பிரிவு, மற்றும் பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 599/எச்1/2020)**

**பொருள் எண் :19**

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், மற்றும் ஓட்டுநர்களுக்கு 2019–2020 ம் ஆண்டிற்கு காலனிகள் உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.0.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**<u>(ந.க.எண் 586/எச்1/2020)</u>**

**பொருள் எண் :20**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85 DBC பணியாளர்கள் 01.01.220 முதல் 30.06.2020 வரை பயன்படுத்தி கொள்ளவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ.54.00 லட்சத்திற்கும் ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே பணி செய்து வரும் 85 DBC பணியாளர்களை வைத்து 01.07.2020 முதல் 31.12.2020 டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.54.00 லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே இந்நகராட்சியில் பணி செய்து வந்த 1) இன்பம் மகளிர் சுய உதவிக்குழு 2) ஏஞ்சல் மகளிர் சுய உதவிக்குழு 3) இளந்தென்றல் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய மூன்று மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் 85 பணியாளர்களை பெற்று பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1245/எச்1/2019)**

**பொருள் எண் :21**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் மினிலாரி எண். TN 23 X 6607 மகாசக்தி பாடி ஒர்க்ஸ் பூந்தமல்லி, சென்னை, அவர்களின் மூலம் பழுது நீக்கம் செய்யப்பட்டு தகுதிச்சான்று பெற மோட்டார் வாகன ஆய்வாளர், அரக்கோணம் அவர்களின் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது அங்கு குப்பை லாரிக்கு சாலைவரி மற்றும் பசுமைவரி 2011–2012 முதல் 2018–2019 ஆம் ஆண்டு வரை நிலுவையில் உள்ள வரிகளை செலுத்திய பிறகே தகுதிச்சான்று பெற உரிய கட்டணம் பெற இயலும் என தெரிவிக்கப்பட்டது. எனவே இந்நகராட்சி ஓட்டுனர் திரு.மணிகண்டன் என்பவரின் மூலம் முன்பணமாக செலுத்திய பிறகு அதன் இரசீதினை கொண்டு அலுவலகத்தில் உரிய தொகைகளை பெற்றுக்கொள்ள 04.04.2018 ல் தனிஅலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் அனுமதி பெறப்பட்டு கீழ்காணும் விவரப்படி மோட்டார் வாகன ஆய்வாளர், அரக்கோணம் அவர்களின் அலுவலகத்தில் வரிகள் செலுத்தப்பட்டு 20.07.2018 அன்று மினி லாரி எண்.TN 23 X 6607 தகுதிச்சான்று பெறப்பட்டது. எனவே கீழ்காணும் விவரப்படி இந்நகராட்சி ஓட்டுனர் திரு, மணிகண்டன் என்பவருக்கு ரூ.48650/–யினை வழங்கிட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரி விவரம் | ஆண்டு | செலான் எண் / நாள் | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பசுமை வரி | 12.02.2011 முதல் 11.02.2012 வரை | 19714866 / 06.04.2018 | 515 |
| 2 | | 12.02.2012 முதல் 11.02.2013 வரை | 19714867 / 06.04.2018 | 515 |
| 3 | | 12.02.2013 முதல் 11.02.2014 வரை | 19714868 / 06.04.2018 | 515 |
| 4 | | 12.02.2014 முதல் 11.02.2015 வரை | 19714869 / 06.04.2018 | 515 |
| 5 | | 12.02.2015 முதல் 11.02.2016 வரை | 19714870 / 06.04.2018 | 515 |
| 6 | | 12.02.2016 முதல் 11.02.2017 வரை | 19714871 / 06.04.2018 | 515 |
| 7 | | 12.02.2017 முதல் 11.02.2018 வரை | 19714872 / 06.04.2018 | 515 |
| 8 | | 12.02.2018 முதல் 11.02.2019 வரை | 19714873 / 06.04.2018 | 515 |
| 9 | | சேவைவரி | 19714874 / 06.04.2018 | 250 |
| 10 | புகைச்சான்று கட்டணம் | 30.11.2018 | 14470 / 01.06.2018 | 100 |
| 11 | சாலைவரி | 01.04.2012 முதல் 31.03.2019 வரை | கூசூ609சு1807000240 / கூசூ18071897922142 18.07.2018. | 44180 |
| | | | **மொத்தம் ரூ.** | **48650** |

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுசுகாதாரபிரிவு மினி லாரி எண் கூசூ 23 ஒ 6607 தகுதிச்சான்று பெற உரிய கட்டணங்கள் முன் தொகையாக செலுத்தியுள்ளதற்கும், அதற்குண்டான தொகை ரூ.48650/–யினை திரு. மணிகண்டன் ஓட்டுனர் என்பவருக்கு வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் .22**

இந்நகராட்சியில் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்தவும் மற்றும் பொதுசுகாதாரப்பணிகளை மேற்கொள்ளவும் 2020–2021 ஆம் ஆண்டிற்கான தளவாடச்சாமன்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண் 574/எச்1/2020)**

**பொருள் எண்.23**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் பொதுசுகாதார பிரிவு வாகனங்களுக்கு 2020–21 ஆம் ஆண்டிற்கான காப்பீடு (INSURANCE) **The New India Assurance Co Ltd, Chennai** அவர்களின் மூலம் காப்பீடு புதுபித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> **2020–21 ஆண்டிற்கான காப்பீடு (INSURANCE) The New India Assurance Co Ltd, Chennai அவர்களின் மூலம் காப்பீடு புதுபித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் .24**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துதல், தினசரி வீடுகள் மற்றும் தெருக்களிலுள்ள மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், 36 வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை மற்றும் கால்வாய்களை சுத்தம் செய்தல், தூர்வாருதல், தெருக்களை பெருக்குதல் போன்ற பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் உள்ள 114 துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக அப்புறப்படுத்த முடியாத காரணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் 195 பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.30813/J3/2018 நாள்:11.12.2018.ல் உத்தரவு வழங்கப்பட்டு ஆணையாளர், அரக்கோணம் நகராட்சி அவர்களின் பணி உத்திரவு ந.க.எண் 2835/எச்1/2018–நாள் : 27.06.2019 ல் M/S கிரின் வாரியார், திருவள்ளூர் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 01.07.2019ம் தேதி முதல் இது நாள் வரையிலும் 195 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது .இந்நிலையில் 30.06.2020 தேதியுடன் M/S கிரின் வாரியார், திருவள்ளூர் நிறுவனத்திற்கு பணி உத்திரவு முடிவடைவதாலும் தற்போது கொரானா தொற்று உலகம் முழுவதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும் தமிழ்நாட்டில் 144 தடை உத்திரவு 30.06.2020 தேதி வரை உள்ளதாலும் இப்பொருள் குறித்து ஏற்கனவே முன்னதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலையில் ஏற்பட்டது. மேலும் கிரின் வாரியார் நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சரிவர செய்யாமல் தொடர்ந்து மாதம் மாதம் அபாரதம் விதித்தும், பல அறிவிப்புகள் வழங்கியும் தொடர்ந்து பணியாளர்கள் முழுமையாக வருகை புரியாமலும் பாதுகாப்பு உபகரணங்கள் முழுமையாக பயன்படுத்தாமலும், தளவாடச்சாமன்கள் பணியாளர்களுக்கு முழுமையாக வழங்கப்படாமலும் பணியாளர்களை வைத்து திடக்கழிவு மேலாண்மை பணியான குப்பை பிரித்து வாங்கும் பணியினை முழுமையாக செயல்படுத்தாமலும் பின்னர் நகரத்தில் முக்கிய இடங்களில் குப்பைகள் தேங்கம் செய்து நகராட்சிக்கு தினசரி புகார்கள் வந்த வண்ணம் உள்ளதாலும், இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் செயலாக இச்செயல் உள்ளதாலும், எனவே மேற்கண்ட காரணங்களுக்காக M/S கிரின் வாரியார், திருவள்ளூர் நிறுவனத்தின் பணி உத்திரவு புதுபித்து வழங்காமல் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், பொது சுகாரதார பணியின் அவசரம் அவசியம் கருதி 195 தூய்மை பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினகூலி அடிப்படையில் பணி அமர்த்தி கொள்ளவும், மற்றும் அதற்கான செலவின தொகைகளின் விவரம் கீழ்காணும் விவரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ஒரு துப்புரவு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட கூலி ரூ.335/– என்ற அடிப்படையில் ஓராண்டுக்கான செலவின விவரம்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் தூய்மை பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலி ரூ.335 | ரூ.335/– |
| EPF 13.61% | ரூ.46/– |
| **ESI 3.25 %** | ரூ.11/– |
| ஒரு துப்புரவு பணியாளருக்கு சீருடை (ம) பாதுகாப்பு உபகரணங்களுக்கு ஆண்டுக்குரிய தொகை ரூ.3,200/– (ரூ.3200/365 நாட்கள்=ரூ.9/–) | ரூ.9/– |
| ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 5% | ரூ.17/– |
| மொத்தம் | ரூ.418/– |
| 195 துப்புரவு பணியாளருக்கு ஒரு நாளுக்குறிய செலவினம் ரூ.418x 195 | ரூ.81,510/– |
| 195 துப்புரவு பணியாளருக்கு ஒரு மாதத்திற்குறிய செலவினம் ரூ.82,485x 31 | ரூ.25,26,810/– |
| 195 துப்புரவு பணியாளருக்கு ஒரு ஆண்டிற்குறிய செலவினம் ரூ.82,485x 12 | ரூ.3,03,21,720/– |

**ஒரு மாதத்திற்கான ஊதிய செலவு ரூ.25,26,810/–**
**1 ஆண்டிற்குரிய செலவு = ரூ.3,03,21,720/–**

மேற்கண்ட விவரப்படி 195 தூய்மை பணியாள்களை ஒப்பந்ததாரர் மூலம் தேர்வு செய்யவும் , 12 மாதத்திற்குரிய தோராய செலவினத்தொகை ரூ.3.04/–கோடிக்கு மன்றத்தின் அனுமதியும், புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மற்றும் இப்பணி குறித்து மாநில நாளிதழ் மற்றும் மாநில அரசிதழில் பிரசுரம் செய்யவும், அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.1.50 லட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான தோராய செலவினத் தொகை ரூ.3.04 கோடிக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
3. புதிய ஒப்பந்தப்புள்ளி மாநில நாளிதழ் மற்றும் மாநில அரசிதழில் பிரசுரம் செய்யும் பணிக்கும்,அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண். 2835/2018/எச்1)**

## பொருள் எண் 25

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரானா நோய் தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கொரானா வைரஸ் (COVID–19) பரவல் தடுப்பு குறித்து பொதுமக்களுக்கு 36 வார்டுகளிலும் ஆட்டோவில் ஒலி பெருக்கி அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்கள் 25.06.2020 தேதிய காணொளி மூலம் அறிவுரை வழங்கியுள்ளார். எனவே 26.06.2020 தேதி முதல் தொடர்ந்து அவ்வப்போது தமிழக அரசால் வழங்கப்படும் அறிவுரைகளின்படி தொடர்ந்து ஆட்டோவில் ஒலி பெருக்கி அமைத்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஏற்கனவே விலைப்புள்ளி பெற்று பணி செய்து வந்த திரு.A.தாஜீதீன் என்பவரின் மூலம் (நாள் ஒன்றுக்கு ரூ.2500/–) தொடர்ந்து பணி செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண் 326/எச்1/2020)**

**பொருள் எண் 26**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை தரம் பிரித்து அதில் மக்காத குப்பைகளை (Dry Waste) சேகரம் செய்து அதனை அடைத்து வைத்திட ஏதுவதாக 4000 எண்ணிக்கை போர பைகள் கொள்முதல் செய்து கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது.

| வ. எ. | விவரம் | D.R.ஏஜேன்ஸி அரக்கோணம் (GST 18 % உட்பட ) | ரவி டிரோடர்ஸ் அரக்கோணம் (GST 18 % உட்பட ) |
|---|---|---|---|
| 1 | 4000 எண்ணிக்கை போர பைகள் | 1,92,000/- | 1,99,000/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **D.R.ஏஜேன்ஸி, அரக்கோணம்**, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவின தொகை ரூ.1,92,000/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 541/எச்1/2020)**

**பொருள் எண் 27**

இந்நகராட்சிக்கு கொரானா 19 தடுப்பு நடவடிக்கை மருந்துகள் மற்றும் பொருட்கள் கீழ்காணும் விவரப்படி கொள்முதல் செய்து கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | D.R.ஏஜேன்ஸி அரக்கோணம் (GST 18 % உட்பட) | ரவி டிரோடர்ஸ் அரக்கோணம் (GST 18 % c£gl ) |
|---|---|---|---|---|
| 1 | LYSOL | 750 | 194250 | 200000 |
| 2 | 6.5% SODIUM HYPOCHLORITE | 10000 | 250000 | 260000 |
| 3 | 1% LIQUID CHLORINE | 10000 | 190000 | 200000 |
| 4 | SANITIZER | 400 | 368000 | 370000 |
| 5 | 3 LAYER MASK | 3000 | 60000 | 65000 |
| 6 | HAND GLOVES | 1000 | 200000 | 205000 |
| 7 | PPE-KIT | 500 | 550000 | 560000 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **D.R.ஏஜேன்ஸி, அரக்கோணம்**, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவின தொகை ரூ.18,12,250/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 326/எச்1/2020)**

**பொருள் எண் :28**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் முக்கிய பகுதிகள் குறித்து Global Information system (GIS)- மூலம் புவியியல் தகவல் அமைப்புகளை சேகரிக்கும் பணிக்கு தோராய செலவினம் ரு.2.50/- இலட்சத்திற்கு நகரமன்றம் தனது தீர்மான எண்:561 நாள்:28.06.2019ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் முக்கய பகுதிகள் குறித்து Global Information system (GIS)- மூலம் புவியியல் தகவல் அமைப்புகளை சேகரிக்கும் பணி | 1.Hagrois, 05, M.P.A.Church Street, S.S.Nagar Extension, Thirumalaivoyil, Chennai-62. | Rs.1,90,000/- |
| | | 2.GEO Adithya Technologies, #7,II Floor,Zackeriah Colony Main Road, Kodambakkam, Chennai -94 | Rs.2,10,000/- |
| | | 3.Konseptos, 140/1,4th Floor,V.R.Towers, 2nd Main Road, Kasturi Nagar,Bangalore. | Rs.2,20,000/- |

<u>அலுவலகக்குறிப்பு</u>:
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி வரப்பெற்ற விலைபுள்ளிகளில் குறைந்த விலைபுள்ளி அளித்துள்ள Hagrois, 05, M.P.A.Church Street, S.S.Nagar Extension, Thirumalaivoyil, Chennai-62 என்பவரின் குறைந்த விலைபுள்ளியை ஏற்கலாம்.
3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:301/2019/எப்1)

**பொருள் எண் :29**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் முக்கய பகுதிகள் குறித்து Global Information system (GIS)- மூலம் GPS தொழில் நுட்பத்தில் சாலைகளின் விவரம் பொதுக்கழிப்பிடங்கள் MCC அமைவிடங்கள்,சுடுகாடு, குப்பை தொட்டிகள், பூங்காக்கள் மற்றும் நீர்நிலைகள் ஆகிய விபரங்களுடன் நகர வரைப்படம் தயார் செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரு.2.50/- இலட்சத்திற்கு நகரமன்றம் தனது தீர்மான எண்:562 நாள்:28.06.2019ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி விலைபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் முக்கய பகுதிகள் குறித்து Global Information system (GIS)- மூலம்,GPS தொழில் நுட்பத்தில் சாலைகளின் விவரம் பொதுக்கழிப்பிடங்கள் | 1.Hagrois, 05, M.P.A.Church Street, S.S.Nagar Extension, Thirumalaivoyil, Chennai-62. | Rs.1,85,000/- |
| | | 2.GEO Adithya Technologies, #7,II Floor,Zackeriah Colony Main Road, Kodambakkam, Chennai -94 | Rs.1,98,000/- |

| | | | |
|---|---|---|---|
| | MCC அமைவிடங்கள்,சுடுகாடு, குப்பை தொட்டிகள், பூங்காக்கள் மற்றும் நீர்நிலைகள் ஆகிய விபரங்களுடன் நகர வரைப்படம் தயார் செய்யும் பணி | 3. The Athens Charitable and Educational Trust, P.N0.47, Ramamoorthy Nagar, Phase – II,Avalurpet Road,Tiruvannamalai. | Rs.2,10,000/- |

அலுவலகக்குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி வரப்பெற்ற விலைபுள்ளிகளில் குறைந்த விலைபுள்ளி அளித்துள்ள Hagrois, 05, M.P.A.Church Street, S.S.Nagar Extension, Thirumalaivoyil, Chennai-62 என்பவரின் குறைந்த விலைபுள்ளியை ஏற்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:308/2019/எப்1)

**பொருள் எண் :30**

இந்நகராட்சியில் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்திய பிறகு ஈக்களை கட்டுபடுத்தவும் மற்றும் கால்வாய் கழிவுகளை அகற்றிய பின் துர்நாற்றம் வீசாமல் இருக்கவும் லெமன் கிராஸ் ஆயில் (LEMON CROSS OIL) தெளிப்பதற்கு 200 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் தேவைப்படுகிறது. எனவே லெமன் கிராஸ் ஆயில் (LEMON CROSS OIL) 200 லிட்டர் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.7.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 412/எச்1/2020)

**பொருள் எண் :31**

அரக்கோணம் நகராட்சி தினசரி நாளங்காடி கடைகள் 100& வாடகை உயர்வு செய்திடவும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 உயர்வு செய்யவும் நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டதை தீர்ப்பின் நகல் மன்றத்தில் பார்வைக்கு பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண் 412/எச்1/2020)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**